DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 2

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அரவிந்த் |
| Father's Name | : | P. டேவிட் |
| Village | : | புரவசேரி |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | நாடார் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 22 |
| Date | : | 07.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.06.2024.

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

07.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது தேரேகால்புதூரில் குடியிருந்து வருகிறேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான் பாலிடெக்னிக் ல் படித்து இடையில் நிறுத்திவிட்டேன். அப்பாவின் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்த மனோஜ் எனது நண்பர். ஆஜர் எதிரி பேச்சி யும் எனது நண்பர்தான். ஆஜர் எதிரி SSD பாத்திரக் கடையில் முழு நேரம் வேலை பார்த்தான். அதில் நான் பகுதி நேரம் வேலை பார்த்தேன். அந்த கடையில் கிஷோர் என்பவரும் வேலை பார்த்தார். 2022 தீபாவளி

அன்று பேச்சியும், மனோஜ் யும் சண்டை போட்டார்கள். எதற்கு சண்டை போட்டார்கள் என எனக்கு தெரியாது. வீட்டிலோ, போலீசிலோ மனோஜ் அந்த சண்டை குறித்து எதுவும் சொல்லவில்லை. பேச்சி, மனோஜ் மீது பகையாகவே சுற்றிக் கொண்டிருந்தான். 25.08.2023 அன்று மாலை 5.30 மணிக்கு SSD பாத்திர கடைக்கு முன்னர் இருந்த டீக் கடையில் நானும் மனோஜ் ம் டீக் குடித்து கொண்டிருந்தோம். நீ எதுக்குலே இங்க வாரா தேவுடியமவனே என பேச்சி மனோஜ் பார்த்து திட்டினான். இருவரும் சண்டைப் போட்டுக் கொண்டார்கள். நாங்கள் தடுத்து விட்டோம். அப்போது பேச்சி இங்கு வந்தா கொலை செய்து விடுவேன் என மனோஜ் ஐ பார்த்து கத்தினான். அதன் பிறகு 28.08.2023 அன்று இரவு 8.15 மணியளவில் மனோஜ் யும், மனோஜ் அண்ணனும் கிருஷ்ணன் கோவில் தெற்கு ரத வீதி, தெப்பகுளம் அருகில் நின்று கொண்டிருந்த போது, பேச்சி வந்து எதுக்கு நீ இங்க நிற்கிறாய் வராதே என்று சொன்னால் கேட்க மாட்டாயா என கூறி ஒரு கத்தியை வைத்து மனோஜ் ஐ வெட்டப் போனான். அவன் விலகி விட்டான் கத்தி கீழே விழுந்துவிட்டது. நான் சண்டை நடப்பதை பார்த்து கொண்டு கொஞ்சம் தள்ளி நின்று கொண்டிருந்தேன். மனோஜம் அவருடைய அண்ணனும் கத்தினார்கள். பேச்சி மறைத்து வைத்திருந்த ஸ்கூரு டிரைவரை வைத்து நெஞ்சில், கழுத்தில், தொண்டையில் குத்தினான். நானும் மனோஜின் அண்ணனும், கிஷோரும் தடுக்க முயற்சி செய்தோம் முடியவில்லை. கிஷோரும் சம்பவ நடக்கும்போது அங்கே தான் இருந்தான். அதற்கு பிறகு மனோஜின் அண்ணன் மனோஜ் யை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார். ஒரு Suzhuki பைக்கில் அஜய் என்பவருடன் கூட்டிச் சென்றார். ஆஜா் எதிரியும் அதற்குள் பைக்கில் ஓடி விட்டான். மனோஜ் மருத்துவமனையில் சேர்த்த 5 நிமிடத்தில் இறந்து விட்டதாக சொன்னார்கள். சம்பவத்தில் இறந்து போன மனோஜ் க்கு தொண்டையிலும், காது பகுதியிலும், காது அருகே மண்டைப் பகுதியிலும், நெஞ்சுப் பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும், வலது விளா பகுதியிலும் காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் மனோஜ் க்கு மட்டும் காயம் ஏற்பட்டதா என்றால் முதலில் பேச்சி கத்தியால் வெட்ட முயற்சி

செய்தபோது கத்தி கிழே விழுந்து விட்டது. அதை வைத்து மனோஜ் பேச்சியின் கையிலும், காலிலும் வெட்டி விட்டான். அதில் அவனுக்கு காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த கத்தி மற்றும் ஸ்கூரு டிரைவரை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 மற்றும் 2 அந்த ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்திதான்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று என்னை போலீசார் பிடித்து காவல் நிலையத்தில் இரண்டு நாள்கள் வைத்திருந்து விசாரித்தார்கள் என்றால் சரியல்லை. என்னை பிடித்தார்கள். ஒரு நாள் வைத்திருந்தார்கள். வழக்கறிஞர் சிம்சன் என்னை காவல் நிலையம் வந்து மீட்டுச் சென்றார் என்றால் சரிதான். அதற்கு பிறகு 10 நாள்கள் நான் காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மனோஜ் மருத்துவமனைக்கு Suzuki பைக்கில் சென்றதாகவோ அஜய் டன் சென்றதாகவோ போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். மனோஜ் யை மருத்துவமனைக்கு கூட்டி செல்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் தான் வடசேரி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் வடசேரி காவல் நிலையத்திற்கு சென்று தகவல் எதுவும் கொடுக்க வில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல சம்பவம் எதையும் பார்க்கவில்லை எனவும், அப்படி பார்த்திருந்தால் உடனடியாக காவல் நிலையம் சென்று தகவல் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சத்தியம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் சத்தியம் மருத்துவமனைக்கு சென்றேன் என்று போலீசார் விசாரிக்கும்போது கூறவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். போலீசார் என்னை எத்தனை மணிக்கு, எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீஸ் நிலையத்தில் வைத்து அன்றைய தினமே இரவு 9.30 மணியளவில் விசாரித்தார்கள். எதிரிக்கும், மனோஜ்க்கும் முன் விரோதம் இருந்தது என்று நான்

யாரிடமும் இதற்கு முன்பு சொல்லவில்லை என்றால் சரிதான். தீபாவளி அன்று சண்டை போட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல நான் பார்த்தேன். போலீஸ் விசாரணையில் அந்த சம்பவம் நேரடியாக தெரியும் என கூறவில்லை என்றால் சரியல்ல கூறினேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல் நிலையத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சத்தியம் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து வடசேரி காவல் நிலையம் வழியாக செல்வது தான் குறுகிய வழி என்றால் சரிதான். இறந்து போன மனோஜ் ன் வீடு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து மேற்கு பக்கம் சுமார் 50 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வழியாக இறந்து போன மனோஜ் யும், அவருடைய அண்ணனும் வீட்டிற்கு செல்வதற்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். நானோ, மனோஜின் அண்ணனோ எதிரியை தடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றாலோ, சம்பவம் நடந்ததாகவும் அதை தடுக்க முயற்சி செய்ததாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எதிரியும் ஒரே கடையில் தான் வேலை பார்த்தோம் என்றால் சரிதான். அந்தக் கடையில் எனக்கும், எதிரிக்கும் இடையே கணக்கில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த கடையில் நான் கையாடல் செய்து அது எதிரிக்கு தெரிந்து அதனால் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் இறந்து போன நபரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு நான் முயற்சி செய்யவில்லை என்றால் அவருடைய அண்ணன் கூட்டிச் சென்றுவிட்டார். நான் சம்பவம் எதையும் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அடையாளம் காட்டிய சான்று பொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றாலும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டிற்கும், சம்பவம்

நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.